இரட்சிப்பு




## அதநாஷியஸ் விசுவாசப் பிரமாணம்

1. இரட்சிப்படைய விரும்புகிறவன் எவனோ; அவன் திருச்சபைக்குரிய பொதுவான விசுவாசத்தை எல்லாவற்றிலும் முதன்மையாய்ப் பற்றிக் கொள்ள வேண்டும்.
2. அந்த விசுவாசத்தைப் பழுதின்றி முழுமையும் அனுசரியாதவன்: என்றைக்கும் :கெட்டுப்போவான் என்பதற்குச் சந்தேகமில்லை.
3. திருச்சபைக்குரிய பொதுவான விசுவாசமாவது: தேவத்துவமுள்ளவர்களைக் கலவாமலும், தேவத்துவத்தைப் பிரியாமலும்,
4. ஏக தேவனைத் திரித்துவமாகவும்: திரித்துவத்தை ஏகத்துவமாகவும் வணங்க வேண்டுமென்பதே.
5. பிதாவானவர் ஒருவர், குமாரனானவர் ஒருவர்: பரிசுத்த ஆவியானவர் ஒருவர்.
6. ஆனாலும் பிதாவுக்கும் குமாரனுக்கும் பரிசுத்த ஆவிக்கும்: ஒரே தேவத்தன்மையும் சமமகிமையும் சமநித்திய மகத்துவமும் உண்டு.
7. பிதா எப்படிப்பட்டவரோ, குமாரனும் அப்படிப்பட்டவர்: பரிசுத்த ஆவியும் அப்படிப்பட்டவர்.
8. பிதா சிருஷ்டிக்கப்படாதவர், குமாரனும், சிருஷ்டிக்கப்படாதவர்: பரிசுத்த ஆவியும் சிருஷ்டிக்கப்படாதவர்.
9. பிதா அளவிடப்படாதவர், குமாரனும் அளவிடப்படாதவர்: பரிசுத்த ஆவியும் அளவிடப்படாதவர்.
10. பிதா நித்தியர், குமாரனும் நித்தியர்: பரிசுத்த ஆவியும் நித்தியர்.

11. ஆகிலும் மூன்று நித்திய வஸ்துக்களில்லை: நித்திய வஸ்து ஒன்றே.
12. அப்படியே மூன்று அளவிடப்படாத வஸ்துக்களில்லை, மூன்று சிருஷ்டிக்கப்படாத வஸ்துக்களில்லை: சிருஷ்டிக்கப்படாத வஸ்து ஒன்றே, அளவிடப்படாத வஸ்து ஒன்றே.
13. அப்படியே பிதா சர்வ வல்லவர், குமாரனும் சர்வ வல்லவர்: பரிசுத்த ஆவியும் சர்வ வல்லவர்.
14. ஆகிலும் மூன்று சர்வ வல்ல வஸ்துக்களில்லை: சர்வ வல்ல வஸ்து ஒன்றே.
15. அப்படியே பிதா தேவன், குமாரனும் தேவன்: பரிசுத்த ஆவியும் தேவன்.
16. ஆகிலும் மூன்று தேவர்களில்லை, தேவன் ஒருவரே.
17. அப்படியே பிதா கர்த்தர், குமாரனும் கர்த்தர்: பரிசுத்த ஆவியும் கர்த்தர்.
18. ஆகிலும் மூன்று கர்த்தர்களில்லை: கர்த்தர் ஒருவரே.
19. அம்மூவரில் ஒவ்வொருவரும் தனித்தனியாகத் தேவனென்றும் கர்த்தரென்றும் அறிக்கையிட வேண்டுமென்று: கிறிஸ்து மார்க்க சத்தியம் கட்டளையிட்டிருக்கிறது போல;
20. மூன்று தேவர்கள் உண்டென்றும், மூன்று கர்த்தர்கள் உண்டென்றும் சொல்லக்கூடாதென்று: திருச்சபைக்குரிய பொதுவான சித்தாந்தம் கட்டளையிட்டிருக்கிறது.
21. பிதா ஒருவராலும் உண்டாக்கப்பட்டவருமல்ல: சிருஷ்டிக்கப்பட்டவருமல்ல, ஜெனிப்பிக்கப்பட்டவருமல்ல.
22. குமாரன் பிதாவினாலேயே இருக்கிறவர்: உண்டாக்கப்பட்டவருமல்ல, சிருஷ்டிக்கப்பட்டவருமல்ல, ஜெனிப்பிக்கப்பட்டவரே.
23. பரிசுத்த ஆவி பிதாவினாலும் குமாரனாலும் இருக்கிறவர்: உண்டாக்கப்பட்டவருமல்ல: சிருஷ்டிக்கப்பட்டவருமல்ல: ஜெனிப்பிக்கப்பட்ட வருமல்ல: புறப்படுகிறவரே.
24. ஆகையால் மூன்று பிதாக்களில்லை, ஒரே பிதாவும், மூன்று குமாரரில்லை, ஒரே குமாரனும்: மூன்று பரிசுத்த ஆவிகளில்லை, ஒரே பரிசுத்த ஆவியும் உண்டு.
25. அன்றியும் இந்தத் திரித்துவத்தில் ஒருவரும் முந்தினவருமல்ல, பிந்தினவருமல்ல: ஒருவரில் ஒருவர் பெரியவருமல்ல, சிறயவருமல்ல.
26. மூவரும் சமநித்தியரும்: சரிசமானருமாம்.

வேதாகமம் இரட்சிப்பு நீங்கள் மறுபடியும் பிறக்க வேண்டும்

27. ஆதலால் மேற்சொல்லியபடி, எல்லாவற்றிலும், ஏகத்துவத்தைத் திரித்துவமாகவும், திரித்துவத்தை ஏகத்துவமாகவும் வணங்க வேண்டும்.
28. ஆனபடியால் இரட்சிப்படைய விரும்புகிறவன்: திரித்துவத்தைக் குறித்து இப்படியே நினைக்க வேண்டும்.
29. மேலும் நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மனுஷாவதாரத்தைக் குறித்துச் சரியானபடி விசுவாசிப்பதும்: நித்திய இரட்சிப்படைவதற்கு அவசியமாயிருக்கிறது.
30. நாம் விசுவாசித்து அறிக்கையிடுகிற சரியான விசுவாசமாவது, தேவ குமாரனாகிய நம்முடைய நாதர் இயேசு கிறிஸ்து தேவனும் மனுஷனுமாய் இருக்கிறார்.
31. உலகங்கள் உண்டாவதற்கு முன்னே அவர் ஜெனிப்பிக்கப்பட்டு, பிதாவின் தன்மையையுடைய தேவனாகவும்: உலகத்தில் பிறந்த தம்முடைய தாயின் தன்மையையுடைய மனுஷனாகவும் இருக்கிறார்.
32. குறைவற்ற தேவனாயும், பகுத்தறிவுடைய ஆத்துமாவும் நரதேகமும் பொருந்திய குறைவற்ற மனுஷனாயும் இருக்கிறார்.
33. தேவத்தன்மையின்படி பிதாவுக்குச் சரியானவர்: மனுஷத்தன்மையின்படி பிதாவுக்கு தாழ்ந்தவர்.
34. அவர் தேவனும் மனுஷனுமாயிருந்து: இருவராயிராமல் கிறிஸ்து என்னும் ஒருவராகவே இருக்கிறார்.
35. தேவத்தன்மை மனுஷத்தன்மையாய் மாறினதினாலேயல்ல: தெய்வத்தில் மனுஷத்தன்மையைச் சேர்த்துக் கொண்டதினாலேயே, ஒருவராயிருக்கிறார்.
36. இரண்டு தன்மையும் கலந்ததினாலேயல்ல: ஒருவராகப் பொருந்தினதினாலே, முற்றும் ஒருவராயிருக்கிறார்.
37. பகுத்தறிவுடைய ஆத்துமாவும் சரீரமும் பொருந்தி, ஒரே மனுஷனாயிருப்பது போல: தேவனும் மனுஷனும் பொருந்தி ஒரே கிறிஸ்துவாயிருக்கிறார்.
38. அவர் நமக்கு இரட்சிப்புண்டாகப் பாடுபட்டு: பாதாளத்தில் இறங்கி, மூன்றாம் நாள் மரித்தோரிடத்திலிருந்து எழுந்தருளினார்.
39. அவர் பரமண்டலத்துக்கேறி, சர்வ வல்லமையுள்ள பிதாவாகிய தேவனுடைய வலது பாரிசத்தில் வீற்றிருக்கிறார்: அவ்விடத்திலிருந்து உயிருள்ளோரையும் மரித்தோரையும் நியாயந்தீர்க்க வருவார்.

வேதாகமம்
இரட்சிப்பு
நீங்கள் மறுபடியும் பிறக்க வேண்டும்

40. அவர் வரும் பொழுது, சகல மனுஷரும் தங்கள் சரீரங்களோடு எழுந்து: தங்கள் கிரியைகளைக் குறித்துக் கணக்கு ஒப்புவிப்பார்கள்.

41. நன்மை செய்தவர்கள் நித்திய ஜீவனையும்: தீமை செய்வதவர்கள் நித்திய அக்கினியையும் அடைவார்கள்.

42. திருச்சபைக்குரிய பொதுவான விசுவாசம் இதுவே: இதை ஒருவன் உண்மையாய் விசுவாசியாவிட்டால் இரட்சிப்படையான்.

பிதாவுக்கும் குமாரனுக்கும் பரிசுத்த ஆவிக்கும்: மகிமை உண்டாவதாக:

ஆதியிலும் இப்பொழுதும் எப்பொழுதுமான: சதாகாலங்களிலும் மகிமை உண்டாவதாக. ஆமென்.

நீங்கள் மறுபடியும் பிறக்க வேண்டும்

www.ratchipu.com